# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 16 திங்கட்கிழமை 31.03.2025 கதிர் 167



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel



# புலம்பெயர் தமிழரின் அழுத்தத்தால் இலங்கைக்குப் பாரிய அச்சுறுத்தல்!

## பதறுகின்றார் தயாசிறி எம்.பி.



கொழும்பு, மார்ச் 31

"யுத்தத்தின் போது பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமாகும். ஆனால், அது குறித்த விசாரணைகள் உள்ளகப் பொறிமுறையின் கீழ் முன்னெடுக்கப்பட வேண்டும். தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்களான புலம்பெயர் தமிழர்களின் அழுத்தங்களால் நாட்டுக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

குருணாகலில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"இதற்கு முன்னர் 58 பேருக்கு எதிராக இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இதனை வழக்கமாகக் கொண்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் பிரித்தானியா தடை விதிப்பது இதுவே முதன்முறையாகும். எவரேனும் ஒருவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டால் அவை நிரூபிக்கப்பட்டால் அன்றி, குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டமைக்காக மாத்திரம் தடை விதிப்பது பொறுத்தமற்றது.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்து 16 ஆண்டுகளின் பின்னர் இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. பட்டலந்த ஆணைக்குழுவில் ஆரம்பித்தது இன்று இந்த நிலைமையில் வந்து நிற்கின்றது.

பட்டலந்த வதை முகாம் தொடர்பில் ஆணைக்குழு அமைத்து விசாரணைகளை முன்னெடுப்பதாயின் உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புலம்பெயர் தமிழர்கள் உள்ளிட்ட தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

எனவே, வெளிநாடுகளின் இவ்வாறு செயற்பாடுகள் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியவையாகும். ஆனால், வெளிவிவகார அமைச்சு இந்த விவகாரத்தில் அமைதியாகவுள்ளது. இதே நிலைமை தொடர்ந்தால் இது நாட்டுக்கே அச்சுறுத்தலாக அமையும். எனவே, இவ்வாறான விடயங்களில் நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் தீர்மானங்களை எடுக்குமாறு அரசை வலியுறுத்துகின்றோம்.

யுத்தத்தின்போது பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமாகும். ஆனால், அது குறித்த விசாரணைகள் உள்ளகப் பொறிமுறையின் கீழ் முன்னெடுக்கப்பட வேண்டும்.


7

## முல்லை. கடலில் மூழ்கி 20 வயது யுவதி மாயம்

முல்லைத்தீவு, மார்ச் 31

முல்லைத்தீவு, நாயாற்றுக் கடலில் அள்ளுண்டு சென்ற மூன்று பெண்களில் இருவர் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலை

7



## 96 கிலோ கஞ்சாவுடன் மூவர் மடக்கிப் பிடிப்பு




யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குப்பிட்டிப் பாலத்தை அண்மித்த ஏ - 32 வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 96 கிலோகிராம் கஞ்சாவுடன் மூவர் கைது


7

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் விபத்தில் மரணம்!

கண்டி, மார்ச் 31

கண்டி - பேராதனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எதடுவாவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்

7



## யாழ். பல்கலைக்கழக புதுமுக மாணவன் மீது சிரேஷ்ட மாணவர்கள் கொலைவெறித் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான பீட புதுமுக மாணவன் மீது சிரேஷ்ட மாணவர்கள் தலைக்கவசத்தால் தாக்கி சித்திரவதை புரிந்தமையால் மாணவனின் காது கேட்கும் திறன் குறைவடைந்துள்ளது என்று பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தை தெரிவித்துள்ளார்.

மகன் மீதான தாக்குதல் சம்பவம் மற்றும் சித்திரவதை ஆகியவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்

7




## முன்னாள் அமைச்சர் டிரானிடம் 6 மணிநேர வாக்குமூலம் பதிவு



கொழும்பு, மார்ச் 31

முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகி வாக்குமூலம் வழங்கினார்.

2023 ஆம் ஆண்டு மாத்தறை - வெலிகம பிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு தொடர்பில் வாக்குமூலமளிப்பதற்காக முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குற்றப்

7

## ஓய்வுபெற்ற சிவில் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர் சம்மாந்துறையில் துப்பாக்கி, ரவைகளுடன் சிக்கினார்

சம்மாந்துறை, மார்ச் 31

அனுமதிப்பத்திரம் இல்லாத "பொரதொளகாய் சொட் கண்" வகையைச் சேர்ந்த துப்பாக்கி மற்றும் ரி - 56 வகையைச் சேர்ந்த துப்பாக்கியின் 10 ரவைகளுடன் ஓய்வுபெற்ற சிவில் பாதுகாப்புப்படை உத்தியோகத்தர் ஒருவர் சம்மாந்துறைப் பொலிஸாரால் இன்று

7



# திருடப்பட்ட சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும்



கொழும்பு,மார்ச் 31

சட்டவிரோதமாக ஈட்டிய சொத்துக்களை அரசுடமையாக்கும் சட்டமூலம் ஏப்ரல் 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

மாத்தறை வெலிப்பிட்டிய பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது ஜனாதிபதி இதை குறிப்பிட்டார்.

மேலும், மோசடி செய்பவர்கள் மற்றும் ஊழல்வாதிகளுக்கு மீண்டும் நாட்டை ஆட்சி செய்ய வாய்ப்பு வழங்கப்படாது என்றும் சுட்டிக்காட்டினார்.

திருடப்பட்டு குவிக்கப்பட்ட சொத்துக்களை அரசுடமையாக்கும் சட்டத்தை வரும் 8ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவோம். சட்டவிரோதமாக வாங்கிய சொத்துக்களை பறிமுதல் செய்யும் சட்டம். யாரையும் தனிப்பட்ட முறையில் பழிவாங்கும் எண்ணம் எங்களுக்கு இல்லை. "எங்கள் தாய்நாட்டில் சட்டத்தின் ஆட்சியையும் இறையாண்மையையும் மீண்டும் நிலைநாட்டுவதே எங்கள் எதிர்பார்ப்பு." என்றார். (ஐ)

# யாழ். – திருச்சி விமான சேவை நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பம்



கொழும்பு,மார்ச் 31


யாழ்ப்பாணம்சர்வதேசவிமானநிலையத்திற்கும் திருச்சி விமான நிலையத்திற்கும் இடையிலான விமான சேவைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளன. திருச்சியில் இருந்து மதியம்புறப்பட்ட விமானம், யாழ்ப்பாணம்சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த வேளை, விமான நிலையத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

நிகழ்வில் இந்திய துணைத் தூதரகர் சாய் முரளி உள்ளிட்ட துணைத்தூதராக அதிகாரிகள் , விமான நிலைய அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த விமான சேவையானது தினசரி மதியம் 1.25 மணிக்குத் திருச்சியில் இருந்து புறப்பட்டு 2.25 மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடையும். யாழ்ப்பாணத்தில் இருந்து மாலை 3.15 மணிக்குப் புறப்பட்டு திருச்சியை மாலை 4 மணியளவில் சென்றடையும்.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் இருந்து சிங்கப்பூர் பயணிக்க விரும்புவோர் திருச்சி சென்று திருச்சி ஊடாக சிங்கப்பூர் பயணிக்க கூடியவாறான விமான சேவை திட்டமிடப்பட்டுள்ளமையால் கொழும்பு சென்று சிங்கப்பூர் செல்வதற்கான நேர விரயம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# தடுப்பூசி ஏற்றிய குழந்தை உயிரிழப்பு



யாழில் தடுப்பூசி ஏற்றிய ஆண் குழந்தைக்குக் காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் அந்தக் குழந்தை உயிரிழந்துள்ளது.

திருநெல்வேலியை சேர்ந்த 3 மாதங்கள் நிரம்பிய குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த 26ஆம் திகதி, குழந்தைக்கு 2 மாதங்களில் போட வேண்டிய தடுப்பூசி போடப்பட்டது. இந்நிலையில் 27ஆம் திகதி குழந்தைக்குக் காய்ச்சல் ஏற்பட்டது. இதனால் குழந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி 28ஆம் திகதி இரவு உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார் (ஐ)



# தமிழர்களின் சின்னங்கள் இல்லை, பௌத்த சின்னங்களே திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன

கொழும்பு,மார்ச் 31

இந்துக்களின் தொல்பொருள் சின்னாங்களுக்கு எவரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. பௌத்த சின்னங்களே திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகின்றன என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு சொந்தமான காணியை அப்பிரதேசவாதிகள் போலியான காணி உறுதிப்பத்திரங்களுடன் கையகப்படுத்தியுள்ளனர்.

மிகுதியாகியுள்ள காணிகளை சட்டவிரோதமான முறையில் கையகப்படுத்திக் கொள்வதற்கு தொடர்ந்து போராட்டங்களில் விகாரையின் பூஜை வழிபாடுகளுக்கு இடையூறு விளைவிக்கிறார்கள்.

தையிட்டி விகாரையில் கடந்த வாரம் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்ற போது ஒரு தரப்பினர் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்புக்காக அமர்த்தப்பட்டிருந்த இராணுவத்தினர் அவ்விடத்தில் இருந்து வெளியேறிள்ளார்கள்.

இதற்கான கட்டளையை இராணுவத் தளபதி பிறப்பித்துள்ளார். இந்த முறையற்ற செயற்பாடுக்கு அதிருப்தி வெளிப்படுத்தி மல்வத்து பீடம் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது. பிற மதத்தை சார்ந்த இராணுவத் தளபதி இவ்விடயத்தில் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் இடங்களை பௌத்தம் மற்றும் இந்து என்று மத அடிப்படையில் அடையாளப்படுத்த வேண்டாம்என்று தொல்பொருள் திணைக்களத்துக்கு அரசாங்கம் அறிவித்துள்ளது.

பௌத்த மதத்தை பாதுகாக்க வேண்டியது அத்தியாவசியம் என்று அரசியலமைப்பில் தெளிவாக



குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே ஆட்சியாளர்கள் அதற்கமைய செயற்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## தலை வணங்காமல் நுழைந்த பெண் நீதிமன்றின் அதிரடி உத்தரவு



கொழும்பு,மார்ச் 31

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில், பெண் சட டத்தரணி ஒருவரை விளக்க மறியலில் வைக்குமாறு புத்தளம் மேல் நீதிமன்றம் உத்தரவிடப்பட்டுள்ளது.

சிலாபம், ஆராச்சிகட்டுவ பிரதேசத்தில் வசிக்கும் குறித்த பெண் சட்டத்தரணி மீது புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி வழக்கு தொடர்ந்துள்ள நிலையிலேயே இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக மார்ச் 7 ஆம் திகதியன்று குற்றம் சுமத்தப்பட்ட ஒருவருக்கான பிணை விசாரணைக்காக, குறித்த பெண் சட்டத்தரணி முன்னிலையானபோது, நீதிமன்றத்திற்குள் தலை வணங்காமல் நுழைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டத்தரணி, நீதிமன்றத்திற்குள் தலை வணங்காமல் நுழைந்தமை நீதிமன்ற அவமதிப்பதாகும், இது மரியாதை காட்டாததற்கு சமம் என்று அவருக்கு எதிரான குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## புதிய நீர் இணைப்பை பெற பொது மக்களுக்கு அறிமுகமாகும் புதிய வசதி



கொழும்பு,மார்ச் 31

புதிதாகக் குடிநீர் இணைப்பினை பெறுவதற்கு விண்ணப்பிக்கும் செயற்றிட்டத்தினை நிகழ்நிலை ஊடாக முன்னெடுப்பதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, WATERBOARD.LK என்ற வலைத்தளத்திற்குப் பிரவேசிப்பதன் ஊடாக அதற்கான விண்ணப்பங்களைப் பெறமுடியும் என அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

குறித்த கோரிக்கை விடுக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் புதிதாக நீர் இணைப்பு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முன்னோடி திட்டம் தற்போது நடைபெற்று வருவதாகவும், அடுத்த வாரத்திற்குள் நீர் விநியோகம் முன்னெடுக்கப்படும் எனவும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.(ஐ)

## மட்டக்களப்பு வைத்தியசாலையில் பரபரப்பை ஏற்படுத்திய அழைப்பு




கொழும்பு,மார்ச் 31

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையில் இருந்த பெண் வைத்தியர்களை குறிவைத்து தொலைபேசி ஊடாக மர்மநபர் ஒருவர் அநாகரிகமான வார்த்தைகளால் பேசி அவர்களை குழப்பமடைய வைத்த சம்பவம் நேற்று (30) அதிகாலையில் இடம்பெற்றுள்ளதையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, குறித்த வைத்தியசாலை தொலைபேசி பரிவத்தனை நிலையத்துக்கு அதிகாலை 2.00 மணிக்கு இனம் தெரியாத மர்ப நபர் ஒருவர் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்து கொண்டு சில வாட்டுக்களுக்கு தொலைபேசி அழைப்பை மாற்றுமாறு கோரியுள்ளார்.

அந்த அழைப்புக்கள் மாற்றப்பட்டதையடுத்து குறித்த மர்மநபர் அங்கு கடமையில் இருக்கின்ற வாட் பொறுப்பாளர் மற்றம் பெண் வைத்தியர்களின் கையடக்க தொலைபேசிகளை பெற்று அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி அநாகரிகமான முறையில் பேசியுள்ளார். இவ்வாறு அதிகாலை 2.00 மணி தொடக்க காலை 6.00 மணிவரை 13 பேருடன் தொடர்பை ஏற்படுத்தி குழப்பத்தை ஏற்படுத்தியதையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்ட நிலையில் பாதிக்கப்பட்ட வைத்தியர்கள், பொறுப்பாளர்கள் வைத்தியசாலை பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதையடுத்து இது தொடர்பாக பொலிஸ் நிலையத்திலும் சைபர் கிரைம் பிரிவிலும் முறைப்பாடுகளை செய்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும் உதவி பணிப்பாளர்களை தொலைபேசி ஊடாக தொடர்பு ஏற்படுத்திய போதும் தொடர்பு கொள்ள முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ)

## பொலிஸாருக்கு லஞ்சம் கொடுத்த நபர்



கொழும்பு,மார்ச் 31

தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு இலஞ்சம் வழங்க முற்பட்ட லண்டன் வாழ் நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் இன்று கிளிநொச்சி மாவட்டத்தின் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடபில் மேலும் தெரியவருகையில்,

லண்டனில் இருந்து வந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் குடும்பப் பிணக்கு தொடர்பான வழக்கிலிருந்து விடுவிக்குமாறு கோரி இலஞ்சம் வழங்க முற்பட்டுள்ளார்

லண்டன் பிரஜை தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம் சதுரங்கவிற்கு பொலிஸ் நிலைய அலுவலகத்திற்குள் வைத்து 50000 ரூபாய் பணத்தினை இலஞ்சமாக வழங்க முற்பட்டுள்ளார்.

இதன்போதே குறித்த சந்தேகநபர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை இன்றைய தினம் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# 85 ஆயிரம் கோடி முதலீட்டை கோட்டை விட்டது தமிழகம்

## தி.மு.க., அரசு மீது அன்புமணி குற்றச்சாட்டு





'ஆசியாவின் டெட்ராய்ட் சென்னை தான் என்று தமிழக அரசு பெருமிதம் தெரிவித்து வரும் நிலையில், உலகின் மிகப்பெரிய மின்னனு வாகனங்கள் உற்பத்தி நிறுவனம் தமிழகத்தைப் புறக்கணித்து விட்டு தெலுங்கானாவுக்கு சென்றிருப்பது உண்மையாகவே கவலை அளிக்கிறது' என்று பா.ம.க., தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை சீனாவைச் சேர்ந்த மின்சார கார் நிறுவனமான பி.ஒய்.டி **(BYD - Build Your Dreams)** ரூ. 85 ஆயிரம் கோடி முதலீட்டில் இந்தியாவில் அதன் முதலாவது கார் உற்பத்தி ஆலையை தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் அமைக்க முடிவு செய்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. தமிழகத்திற்கு இந்த கார் ஆலையைக் கொண்டு வருவதற்கான அனைத்து வாய்ப்புகளும் இருந்தும் கூட, அந்த வாய்ப்புகளை தமிழக அரசு கோட்டை விட்டிருக்கிறது.

உலக சந்தையில் மின்சார வாகனங்கள் விற்பனையில் டெஸ்லா நிறுவனத்தை விஞ்சி வரும் பி.ஒய்.டி கார் ஆலையை தங்கள் மாநிலத்திற்கு கொண்டு வர வேண்டும் என்று தமிழகம், குஜராத், மஹாராஷ்டிரா, தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் போட்டியிட்டன. இந்த மாநிலங்களில் தமிழகத்திற்குத் தான் அதிக வாய்ப்புகள் இருந்தன. அதற்குக் காரணம், 2019ம் ஆண்டிலேயே பி.ஒய்.டி கார் நிறுவனம் ரூ.2,800 கோடி செலவில் உதிரிபாகங்களை இணைத்து மின்சார வாகனங்களை உருவாக்கும் ஆலையை அமைத்திருந்தது. ஆனாலும் தமிழக அரசால் பி.ஒய்.டி நிறுவனத்தைத்தமிழகத்திற்கு கொண்டு வர முடியவில்லை.

மின்சார கார்கள் உற்பத்திக்கு சாதகமான கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதும், அரசின் அனுமதியை பெறுவது மிகவும் எளிதாக இருப்பதும் தான் பி.ஒய்.டி கார் நிறுவனம் தெலுங்கானாவுக்கு செல்வதற்கு காரணம் ஆகும். ஆசியாவின் டெட்ராய்ட் சென்னை தான் என்று தமிழக அரசு பெருமிதம் தெரிவித்து வரும் நிலையில், உலகின் மிகப்பெரிய மின்னனு வாகனங்கள் உற்பத்தி நிறுவனம் தமிழகத்தைப் புறக்கணித்து விட்டு தெலுங்கானாவுக்கு சென்றிருப்பது உண்மையாகவே கவலை அளிக்கிறது.

ஆந்திர மாநிலத்திடம் ரூ.8,000 கோடி மதிப்பிலான அந்நிய முதலீடுகளை கடந்த 3 மாதங்களில் தமிழக அரசு இழந்து விட்டதாக சில நாட்களுக்கு முன்பு தான் செய்திகள் வெளியாகியிருந்தன. அந்த வருத்தம் மறைவதற்கு முன்பாகவே தமிழகத்திற்கு வந்திருக்க வேண்டிய ரூ.85 ஆயிரம் கோடி முதலீடு கைநழுவி தெலுங்கானாவுக்கு சென்றிருக்கிறது. தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான தமிழகத்தின் திறன் குறைந்து வருவதையே இது காட்டுகிறது.

மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட தொழில் தொடங்குவதற்கு ஏற்ற மாநிலங்கள் பட்டியலில் கடந்த முறை மூன்றாவது இடத்தில் இருந்த தமிழகம், நடப்பாண்டில் பட்டியலில் இருந்தே நீக்கப்பட்டுள்ளது. தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ள 30 வகையான சீர்திருத்தங்களில் பெரும்பான்மையானவற்றை தமிழக அரசு செய்யவில்லை என்பது தான் இதற்குக் காரணம் ஆகும்.

தமிழகத்திற்கான தொழில் முதலீடுகள் பிற மாநிலங்களுக்கு செல்வது ஏன்? தொழில் முதலீடுகளை ஈர்க்கும் விஷயத்தில் தமிழகம் எங்கு பின் தங்கியிருக்கிறது? முதலீடுகளை ஈர்க்க மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்னென்ன? என்பது குறித்தெல்லாம் தமிழக அரசு ஆராய வேண்டும். அதனடிப்படையில் தொழில் முதலீட்டை ஈர்ப்பதற்கான தமிழகத்தின் திறனை அரசு அதிகரிக்க வேண்டும், இவ்வாறு அவர் கூறினார். (ஐ)



# 'ஆன்லைன் சூதாட்ட தற்கொலைகள் அரசு தடுக்குமா வேடிக்கை பார்க்குமா?'

'ஆன்லைன்' சூதாட்டத்தினால், 87 பேர் இறந்த நிலையில், உச்ச நீதிமன்றத்தில் தடை பெறுவதில், தமிழக அரசின் நிலை என்ன என, பா.ம.க., தலைவர் அன்புமணி கேள்வி எழுப்பி உள்ளார்.

திருப்பத்துார் மாவட்டம், நாட்றாம்பள்ளி தாலுகா, மிட்னாக்குப்பம் கிராமத்தை சேர்ந்த மதன்குமார். இவர் 'ஆன்லைன்' சூதாட்டத்தில் பணத்தை இழந்ததால், அவரது குடும்பம் வறுமைக்கு தள்ளப்பட்டது.

'ஆன்லைன்' சூதாட்டம் காரணமாக நிகழும் தற்கொலைகளின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்தபடி உள்ளது. வெண்ணிலாவின் தற்கொலை, கடந்த 3 மாதங்களில் நிகழ்ந்த 10-வது தற்கொலை.

'தி.மு.க., அரசு இயற்றிய 'ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம் செல்லாது' என, சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதற்கு பின், கடந்த ஒன்றரை ஆண்டுகளில், 27 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஒட்டுமொத்தமாக 87 பேர் இறந்துள்ளனர். 'ஆன்லைன்' சூதாட்டத்திற்கு, உச்ச நீதிமன்றத்தில் உடனே தடை பெறுவது சாத்தியமில்லை என்றால், தடை செய்வதற்காக புதிய சட்டத்தை, சட்டசபையில், உடனே நிறைவேற்ற வேண்டும்.

ஆன்லைன் சூதாட்டத்தால் நிகழ்ந்த தற்கொலைகளில், 77 உயிரிழப்புகள் தி.மு.க., ஆட்சியில் நிகழ்ந்துள்ளன. எனவே, ஆன்லைன் சூதாட்ட தற்கொலைகளை தடுக்க வேண்டிய பொறுப்பு, தி.மு.க., அரசுக்கு உள்ளது.

ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்யும் விவகாரத்தில் அரசின் நிலைப்பாடு என்ன் உச்ச நீதிமன்றத்தை அணுகியோ, புதிய சட்டத்தை இயற்றியோ, ஆன்லைன் சூதாட்டத்தைத் தடுக்கப் போகிறதா அல்லது தற்கொலைகள் தொடரட்டும் என, வேடிக்கை பார்க்கப் போகிறதா. இதை தமிழக அரசு தெளிவுப்படுத்த வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# பதவிக்காக அரசியலுக்கு வரவில்லை: அண்ணாமலை



'சி வோட்டர்' கருத்துக் கணிப்பில், தமிழக முதல்வருக்கு 27 சதவீதம் தான் ஆதரவு கிடைத்துள்ளது. எந்த ஒரு மாநிலத்தின், எவ்வளவு மோசமான முதல்வராக இருந்தாலும், 40 சதவீதமாவது ஆதரவு இருக்கும்.

நல்ல முதல்வராக இருந்தால் 65 சதவீதம் இருக்கும். நான்கு பேரில் மூன்று பேர் வேண்டாம் என்று சொல்கின்றனர். எங்கள் கள ஆய்வும் இதையே சொல்லுகிறது.

தமிழகத்தில் ஒவ்வொரு மண்டலங்களிலும், ஒவ்வொரு விதமாக மக்கள் ஓட்டளிக்கின்றனர். ஐந்தில் மூன்று மண்டலங்களில் ஜெயிக்காமல், யாரும் ஆட்சிக்கு வர முடியாது.

மாநிலத்தின் எதிர்க்கட்சித் தலைவரான பழனிசாமி, நாட்டின் உள்துறை அமைச்சரை சந்திப்பது தவறு இல்லை.

முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனுக்கும், விஜய்க்கும் மாநில அரசு பாதுகாப்பு கொடுக்காததால், மத்திய அரசு கொடுக்கிறது அரசியல் காரணம் ஏதுமில்லை. நடிகர் விஜய் தன் நிலைப்பாட்டை தெரிவித்திருக்கிறார் அதை வரவேற்கிறேன்.

தமிழகம் விரும்பும் அடுத்த முதல்வர் யார்: கருத்து கணிப்பில் புது தகவல்

தமிழக மக்களின் நலனும், கட்சியின் நலனும் தான் எனக்கு முக்கியம். நான் அரசியலுக்கு வந்திருப்பது, பதவிக்காக கிடையாது. ஒரு நேர்மையான அரசியல்வாதியாக வாழ விரும்புகிறேன்.

மூன்றாவதாக ஒரு ரயில், திருவாரூர், திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை போன்ற அதிக ரயில் செல்லாத இடங்களையும் இணைக்கிறது.

கோவை - ராமநாதபுரம் - ராமேஸ்வரத்தை இணைக்க ரயில் தேவை என, அமைச்சரிடம் கேட்டுள்ளோம். கரூரிலிருந்து 99 கி.மீ.,க்கு ஆறு வழிச்சாலை அமைக்கும் திட்டம், கிடப்பில் போடப்படவில்லை. நிலம் கையகப்படுத்தும் பரிசீலனை கமிட்டி பரிந்துரைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# ஒரே மன உளைச்சல்: திருமாவளவன் உருக்கம்

"கட்சி நிர்வாகிகளால் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகி இருக்கிறேன். வரும் 2026ல் நடக்கவிருக்கும் சட்டசபை தேர்தல் முடியும் வரை, கட்சி நிர்வாகிகள் யாரும் யு-டியூப் சேனலுக்கு பேட்டி கொடுக்கக்கூடாது,'' என விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்து உள்ளார்.

கட்சி கட்டுப்பாடு என்பது மிக முக்கியமானது. கட்சி வளர்ச்சி அடையும்போது, முன்னணி தலைவர்கள் இடையே முதிர்ச்சி வெளிப்பட வேண்டும்.

கட்சியில் ஒவ்வொருவரும் கட்டுப்பாடுகளோடு செயல்பட வேண்டும் அந்த கட்டுப்பாடு, பிறருக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும்.

கட்சி நிர்வாகிகளால் மன உளைச்சல் திருமாவளவன் விரக்தி வீடியோ!

கட்சிக்குள், ஒருவருக்கு மற்றொருவர் முரண்பாடுகளுடன் இருக்கலாம். அதற்காக, முரண்பட்ட கருத்துகளையெல்லாம் சமூக வலைதளங்களில் பகிர்வது, கட்சிக்கு நல்லதல்ல. அப்படிப்பட்ட கருத்துகளை இனி, கட்சியினர் யாரும் பதிவு செய்யக்கூடாது.

பேச அழைப்பவர்கள், என்ன நோக்கத்திற்காக அழைக்கின்றனர் என பார்க்காமல், வாய்ப்பு கிடைக்கிறதே என்று செல்வதும், அங்கு சென்று இஷ்டத்துக்கு பேசுவதும் கவலைக்குரியது.

யார் பேட்டிக்கு அழைத்தாலும், கட்சித் தலைமையின் அனுமதி பெற்றே செல்ல வேண்டும்.

என்னை பொறுத்த வரை, வரும் 2026ல் நடக்கவிருக்கும் சட்ட சபைத் தேர்தல் வரை, கட்சி முன்னணியினர், யு - டியூப் சேனல்களுக்கு பேசச் செல்லாமல் இருப்பதோடு பேட்டி கொடுக்காமலும் இருப்பது நல்லது. வாய்ப்பு வந்தாலும் தவிர்க்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார் (ஐ)

# மே–டிசம்பர்



நம் முன்னோர்கள் சொன்னது என்று எத்தனையோ விஷயங்களை நாம் அடி பிசகாமல் பிடிக்கிறதோ இல்லையோ கடைபிடித்து வருகிறோம். அதில் மிக முக்கியமானது திருமண பந்தத்தில் ஆணை விடப்பெண் இளையவளாக இருக்க வேண்டும் என்பதுதான். அதற்கு அறிவியல்பூர்வமான காரணங்கள் இல்லை. ஆணாதிக்கத்தின் அடிப்படையில்தான் இத்தகைய நடைமுறையைப் பழக்கியிருக்கிறார்கள். ஏனெனில் ஆண் வயதான பின்னர் தனது தேவைகளைப் பூர்த்தி செய்ய, முகம் சுளிக்காது தன்னைக் கவனித்துக் கொள்ள, சம்பளம் எதுவும் கேட்காத ஒரு ஜீவன் வேண்டும் என்கிற நோக்கத்தில்தான் இத்தகைய வழக்கத்தை நடைமுறைப்படுத்தி இருக்கிறார்கள். ஆனால் ஆண் வயதாக ஆக வலுவாகிறான் என்றும், பெண் வயது ஏறும் போது வலுவிழந்து விடுகிறாள் என்றும் ஒரு ‘சப்பைக்கட்டு’ கட்டி, அதனால்தான் இந்த வயது வித்தியாசம் என்றும் சொல்கிறார்கள். வலுவில்லாமல் பெண் இருந்தாலும் அவள் வலுவான(?) ஆணுக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்றுதான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. ஆணுக்கு சேவை செய்யவே பெண் படைக்கப்பட்டிருக்கிறாள் என்பதை மறைமுகமாக உணர்த்திக் கொண்டே இருக்கிறார்கள்.

உடல் ரீதியான கலவிக்கு ஏதுவாகத்தான் இந்த வயது வித்தியாசம் என்றும் ஒரு சாரார் சொல்கிறார்கள். ஆணுக்கு அதிக வயது இருந்தால்தான் வயது குறைவான பெண்ணைப் பக்குவமாகக் கையாளுவான் என்று விளக்கம் வேறு. ஆனால் இது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை என்பது வேறு விஷயம். ஆனால் அடிப்படைக்காரணம் என்னவென்றால் பெண்ணுக்கு அதிக வயது இருந்தால் அந்த ஆணால் அவரைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும் என்கிற மூடநம்பிக்கையால்தான் இத்தகைய பத்தாம் பசலித்தனமான வழக்கங்கள் காலங்காலமாகக் கடைபிடிக்கப்படுகின்றன. கலாசாரம் என்கிற பெயரில் இத்தகைய பிற்போக்குத்தனமான கருத்துகள் மக்கள் மனதில் வலுக்கட்டாயமாகப் பதிய வைக்கப்பட்டுள்ளது. இதையொட்டியே நமது சட்ட வரைவுகளும் எழுதப்பட்டுள்ளன.

உடல் ரீதியான கலவிக்கு ஏதுவாகத்தான் இந்த வயது வித்தியாசம் என்றும் ஒரு சாரார் சொல்கிறார்கள். ஆணுக்கு அதிக வயது இருந்தால்தான் வயது குறைவான பெண்ணைப் பக்குவமாகக் கையாளுவான் என்று விளக்கம் வேறு. ஆனால் இது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை என்பது வேறு விஷயம். ஆனால் அடிப்படைக் காரணம் என்னவென்றால் பெண்ணுக்கு அதிக வயது இருந்தால் அந்த ஆணால் அவரைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும் என்கிற மூடநம்பிக்கையால்தான் இத்தகைய பத்தாம் பசலித்தனமான வழக்கங்கள் காலங்காலமாகக் கடைபிடிக்கப்படுகின்றன.

திருமண வயது பெண்ணுக்குக் குறைவாக இருந்தால்தான் மனதளவிலும், உடலளவிலும் பலவீனமான அவளை ஆண் தனக்கு ஏற்ப வளைத்துக் கொள்ள முடியும் என்று திட்டமிட்டு இத்தகையதொரு வழக்கம் தோன்றியிருக்கக் கூடும். வயது சமமாக இருந்தால் எல்லாவற்றிலும் சமத்துவத்தை எதிர்பார்ப்பார்கள் என்பதுதான் ஆணுக்கு உறுத்தியிருக்கும். இதனால் பெண்களைக் கலாசாரம், பண்பாடு என்கிற பெயரில் பயமுறுத்தி, அவர்களின் சுய மரியாதையை இழக்க வைத்து, ஆளுமையின்றி சொன்னதைச் செய்யும் அடிமைகளாக மாற்ற இத்தகைய உத்தியைக் கடைபிடித்திருக்கிறார்கள். பல நூற்றாண்டுகளாகக் கடைபிடித்து வருவதால் இதை அனைவரும் சரி என்று ஒப்புக் கொள்ள இயலாது. இந்தக் கருத்தை வலியுறுத்தவே வயது குறைந்த பெண்ணைத் திருமணம் செய்தால் ஆண்மைக்குறைவு ஏற்பட்டு விடும் என்று ஆண்களைப் பயமுறுத்தி வைத்திருக்கிறார்கள். போதாக்குறைக்கு இந்தப் போலிச் சோதிடர்கள் வேறு ஜாதகத்தில் கட்டம், சதுரம், வட்டம் சரியில்லை என்று பெற்றோரைப் பீதியில் ஆழ்த்துகிறார்கள். கணவனைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்று பெண்ணுக்கு இருக்கும் நிர்ப்பந்தம், நோய்வாய்ப்பட்ட மனைவியைக் கணவர் பராமரிக்க வேண்டும் என்று சிறிதும் ஆண்களுக்குப் போதிப்பதில்லை. தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வரும் பூமியைப் போல, அவள் தன்னையும் தானே கவனித்துக் கொண்டு, கணவனையும் கவனித்துக் கொள்ள வற்புறுத்தப்படுகிறாள்.

கணவனுக்கு வயது குறைவாகவும், மனைவிக்கு வயது அதிகமாகவும் இருப்பதை மே – டிசம்பர் ரிலேஷன்ஷிப் என்று சொல்கிறார்கள். பெண் மிகவும் இளமையாக இருப்பதை மே என்கிற வார்த்தையும், ஆண் மிகவும் வயதானவராக இருப்பதை டிசம்பர் என்கிற வார்த்தையும் குறிக்கிறது. மே என்பது வசந்தத்தையும், இளமையை, புதிய தொடக்கத்தையும் உணர்த்துகிறது. டிசம்பர் என்பது குளிர்காலத்தையும், அதிக வயது, முதிர்ச்சி போன்றவற்றையும் குறிப்பிடுகிறது. இவ்வகை உறவு பொதுவாக இருபது முதல் முப்பது வரை உள்ள வயது வித்தியாசத்தைக் குறிக்கிறது. இந்த உறவு வெற்றி பெறுவது தனிப்பட்ட நபர்கள் அவர்களின் விருப்புநிலை, உறவில் வரும் சவால்களை எதிர்கொள்வது ஆகியவற்றைப் பொறுத்து அமையும்.

வயது அதிகமான கணவர், வயது குறைந்த மனைவி இவர்களுக்கிடையே இருக்கும் இயல்பான உறவு போலவே குறைந்த வயது கணவர், அதிக வயது மனைவியின் உறவு நிலையும் இருக்கும். மன மகிழ்ச்சி, உணர்வு ரீதியான பகிர்தல்கள், சந்தோஷமான உறவு போன்றவைதான் திருமண வாழ்வை நீடித்து வைத்திருக்கும் காரணிகள். அவரவர் உடலையும் , மனதையும் ஆரோக்கியமாக வைத்திருப்பதன் மூலமே இது சாத்தியம். வேறு காரணங்கள் இல்லை. ஓர் அறுபது வயது ஆண், இருபது வயதுப் பெண்ணைத் திருமணம் செய்வதை இயல்பாகப் பார்க்கும் நம் சமூகம் பொலிவுட் நடிகை பிரியங்கா சோப்ரா தன்னைவிடப் பத்து வயது குறைந்த நிக் ஜோன்ஸைத் திருமணம் செய்து கொண்டது அதிகம் விமர்சிக்கப்பட்டது. அருவருப்பான மீம்களையும் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தார்கள். சமூகத்தின் மூளை எவ்வளவு துருப்பிடித்திருக்கிறது.

சாணக்ய நீதியின்படி, கணவன் மனைவி உறவு மிகவும் புனிதமானது. இந்தப் பிணைப்பைத் தக்கவைக்க, ஒருவர் மற்றவரின் தேவைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டும். மனைவி தன் கணவனின் தேவைகளை நிறைவேற்றவில்லை என்றால், வாழ்க்கையில் மகிழ்ச்சி இல்லை. கணவன் மனைவிக்கிடையே அன்பு எப்போதும் இருக்க வேண்டும். எனவே, இருவருக்கும் வயது வித்தியாசம் அதிகமாக இருக்கக் கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது. நான் கேட்பது என்னவென்றால் இந்தப் புனிதமான உறவில், இருவருக்குமிடையே பிணைப்பைத் தக்க வைத்துக் கொள்ள மனைவி மட்டுமேதான் கணவனின் தேவைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டுமா? பொருளாதார ரீதியாகப் பெண்கள் முன்னேறி விடக் கூடாது என்றுதான் நிறைய ஆண்கள் பெண்களை வேலைக்குச் செல்லவோ, சொந்தத் தொழில் புரியவோ தடைபோடுகின்றனர். அப்படி இருக்கும்போது உழைக்க அனுமதிக்கப்படாத பெண்ணின் தேவைகளை அந்த ஆண் தானே நிறைவேற்ற வேண்டும்?. இதில் என்ன பெரிய தியாக உணர்வு வந்து விடப்போகிறது?. மனைவிக்கு உடல்நிலை சரியில்லாத போது எத்தனை கணவர்கள் அவர்களை அன்புடன் கவனித்துக் கொள்கின்றனர்?. கணவன் மனைவிக்கு இடையே அன்பு அதிகமாக இருப்பதற்கு வயது வித்தியாசம் அதிகமாக இருக்க வேண்டும் என்று சொல்வதற்கு என்ன காரணம்? வயது என்பது ஒருவர் மீதான அன்பையும் ஆசையையும் அதிகரித்து விடாது. அது நாம் நம் இணையிடம் நடந்து கொள்ளும் முறையைப் பொறுத்துதான் இருக்கிறது.

திருமண பந்தம் என்பது ஒருவர் மீது இன்னொருவர் ஆதிக்கம் செலுத்துவது அல்ல. ஒருவருக்கு இன்னொருவர் தோழமையுடன் இன்பம், துன்பம், கனவு, உணர்வுகள், கண்ணீர், எதிர்காலம் போன்றவற்றைப் பகிர்ந்து கொண்டு செல்லும் ஓர் அழகான பயணம். ஆனால் இதை எத்தனை தம்பதியர் புரிந்து கொண்டிருக்கிறார்கள்?

திருமண உறவு நிலைக்க மன முதிர்ச்சிதான் முக்கியக் காரணம். வயது அதிகம் இருந்தும் முதிர்ச்சியில்லாத இணையரால் யாருக்குமே துன்பங்கள்தான் அதிகம். வயது என்பது வெறும் எண்கள்தான். ஒருவரை இன்னொருவர் நன்கு புரிந்து, ஒருவருக்கு இன்னொருவர் விட்டுக் கொடுத்து இணைந்து பயணிக்கும் வாழ்வில் வயதுப் பொருத்தத்தைவிட மனப் பொருத்தம்தான் மிக முக்கியமானது. காதலுக்குக் கண் மட்டும் இல்லை. வயதும் பொருட்டாக இருப்பதில்லை.







# மியான்மர் நிலநடுக்கம்

# மசூதிகளில் தொழுகையில் ஈடுபட்டிருந்த 700 பேர் பரிதாபமாக உயிரிழந்த சோகம்!

மியான்மரில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தின் போது, 60 மசூதிகளில் தொழுகையில் ஈடுபட்டிருந்த 700 பேர் உயிரிழந்துள்ளனர் என முஸ்லிம் அமைப்பு அறிவித்துள்ளது.

நம் அண்டை நாடான மியான்மரில், கடந்த மார்ச் 28ம் தேதி சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில், 7.7 ஆக பதிவான இந்த நிலநடுக்கம், மியான்மரில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலநடுக்கம், மியான்மர் தலைநகர் நய்பிடாவ், மண்டாலே நகரங்களில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. மீண்டும் மீண்டும் நிலநடுக்கத்தால் மியான்மரில் தொடரும் சோகம்!

நிலநடுக்கத்தால்2,000பேர்உயிரிழந்துள்ள நிலையில், 3,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 1700க்கும் மேற்பட்டோர் உடல்கள் மீட்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, பல ஆயிரம் பேரைக்காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. அமெரிக்க புவியியல் ஆய்வு அமைப்பு, பலி எண்ணிக்கை பல மடங்கு உயரும் என, கணித்துள்ளது.

இந்நிலையில், இன்று (மார்ச் 31) மியான்மரில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தின் போது, 60 மசூதிகளில் தொழுகையில் ஈடுபட்டிருந்த 700 பேர் உயிரிழந்துள்ளனர் என முஸ்லிம் அமைப்பு அறிவித்துள்ளது. இது குறித்து மியான்மர் முஸ்லிம் அமைப்பை சேர்ந்த துன் கீ கூறியதாவது: நிலநடுக்கம் ஏற்பட்ட போது 60 மசூதிகள் சேதம் அடைந்தன.

அப்போது நாடு முழுவதும் பல்வேறு மசூதிகளில் வெள்ளிக் கிழமை தொழுகை நடந்தது. தொழுகையில் ஈடுபட்டு இருந்த 700 பேர் உயிரிழந்தனர்.

பழைய காலத்தில் கட்டப்பட்ட பெரும்பாலான மசூதிகள் மிகவும் சேதம் அடைந்தன. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)



## மூன்றாவது முறை அதிபர் பதவி: நகைச்சுவை அல்ல என்கிறார் டிரம்ப்

3வது முறையாக அதிபராக வர வேண்டும் என்ற தனது விருப்பத்தை அதிபர் டிரம்ப் வெளிப்படுத்தி உள்ளார். அவர், நான் கூறுவது நகைச்சுவை அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவை பொறுத்தவரை 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை அதிபர் பதவிக்கான தேர்தல் நடக்கும். அரசியலமைப்பின் 22 வது திருத்தப்படி விதிகளின்படி எந்தவொரு நபரும் இரண்டு முறைக்கு மேல் அதிபர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படக்கூடாது. கடந்த 2020ம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் பைடன் வெற்றி வாகை சூடினார். இதனால் 2016ம் ஆண்டு முதல் 2020ம் ஆண்டு வரை அதிபர் ஆக இருந்த டிரம்ப் தோல்வியை தழுவினார்.

தற்போது கடந்தாண்டு நடந்த அதிபர் தேர்தலில் டிரம்ப் வெற்றி பெற்று, 2வது முறையாக அதிபர் ஆனார். 3வது முறை அதிபர் பதவிக்கு டிரம்ப் போட்டியிடுவார். ஆனால் அமெரிக்கா தேர்தல் விதிப்படி படி போட்டியிட முடியாத சூழல் நிலவுகிறது என்ற தகவல் வெளியாகி இருந்தது. இது குறித்து செய்தி சேனலுக்கு டிரம்ப் அளித்த பேட்டி:

3வது முறையாக அதிபராக வர வேண்டும். நான் கூறுவது நகைச்சுவை அல்ல. இரண்டு முறை மட்டுமே அதிபராக வர முடியும் என்ற வரம்பைத் தவிர்ப்பதற்கு முறைகள் இருக்கிறது. இது குறித்து விரைவில் ஆலோசித்து முடிவு எடுப்பேன். நிறைய அமெரிக்கர்கள் தான் மூன்றாவது முறையாகவும் பதவியேற்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். தற்போது கவனம் முழுவதையும், 2வது அதிபர் பதவி காலம் மீது வைத்துள்ளேன். இவ்வாறு டிரம்ப் கூறியுள்ளார். (ஐ)


# பாங்காக்கில் 30 மாடி கட்டடம் சரிந்து விழுந்ததில் சீன நிறுவனத்திற்கு சிக்கல் ஆவணங்களை அகற்ற வந்ததாக 4 பேர் அதிரடியாகக் கைது

தாய்லாந்தில் நிலநடுக்கத்தால் 30 மாடி கட்டடம் சரிந்து விழுந்த இடத்திற்கு சட்டவிரோதமாக சென்றதாக, கட்டட கட்டுமான திட்ட மேலாளர் உள்பட சீனர்கள் 4 பேரை போலீசார் கைது செய்தனர்.

கடந்த 28ம் தேதி மியான்மரில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. ஏராளமான கட்டடங்கள் சரிந்து விழுந்ததில், 2,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் தாய்லாந்தின் பாங்காக்கிலும் உணரப்பட்டது.

சாதுசாக் பகுதியில் அமைந்துள்ள 30 மாடி கட்டடம் இடிந்து தரைமட்டமானது. அப்போது, அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். அவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மியான்மர் நிலநடுக்கத்தில் பலி எண்ணிக்கை 2,000 ஆக அதிகரிப்பு முழுவீச்சில் நடக்கும் மீட்பு பணி இதுவரையில் 17 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 30க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 70க்கும் மேற்பட்டோரை தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. இதையடுத்து, இந்தக் கட்டடம் இடிந்து விழுந்த பகுதியை பாங்காக் கவர்னர் பேரிடர் பகுதியாக அறிவித்தார். இதனால், அப்பகுதியில் பொதுமக்கள் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது.



இதனிடையே, தாய்லாந்து அரசின் தணிக்கை துறைக்காக கட்டப்பட்டு வந்த இந்தக் கட்டடத்தை சீனாவை சேர்ந்த துணை நிறுவனம் கட்டி வருவது தெரிய வந்துள்ளது. நிலநடுக்கத்தில் ஒரு கட்டடம் மட்டுமே இடிந்து விழுந்துள்ளதால், கட்டடத்தின் உறுதித்தன்மை சர்ச்சையை ஏற்படுத்தியிருப்பது சீன நிறுவனத்திற்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக தாய்லாந்து அரசு விசாரணையில் இறங்கியுள்ள நிலையில், சட்டவிரோதமாக கட்டடம் இடிந்து விழுந்த பகுதிக்கு சென்றதாக, கட்டட கட்டுமான திட்ட மேலாளர் உள்பட சீன நாட்டைச் சேர்ந்த 4 பேரை போலீசார் கைது செய்தனர்.

இது குறித்து போலீஸ் தரப்பில் கூறுகையில், 'நிலநடுக்கத்தால் சரிந்து விழுந்த கட்டடத்தின் ஆவணங்களை அகற்றுவதற்காக, அனுமதியின்றி சீனாவைச் சேர்ந்த 4 பேர் வந்துள்ளனர். அவர்களிடம் எந்த அனுமதி கடிதமும் இல்லை,' என்று கூறினார். இதனிடையே, இன்சூரன்ஸை பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்காகவே, ஆவணங்களை எடுக்க வந்ததாக கைது செய்யப்பட்ட சீனாவைச் சேர்ந்த ஒருவர் விளக்கம் அளித்துள்ளார். (ஐ)

## 96கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டனர். இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப் படையின் உதவியுடன் மேற்படி கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வான் ஒன்றில் 45 கஞ்சா பொதிகளை எடுத்துச் சென்ற வவுனியா பகுதியைச் சேர்ந்த மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழ்.பல்கலை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

டும் எனவும், மகனின் உயிருக்கு பாதுகாப்பு அளிக்குமாறும் தந்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத்தலைவரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

நாத்தாண்டியா பகுதியைச் சேர்ந்த மாணவனே பாதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 27 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விடுதியில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு நடந்து வந்து கொண்டிருந்த புதுமுக மாணவனை விரிவுரைக்குச் செல்லவிடாமல் தடுத்த சிரேஷ்ட மாணவர்கள் சிலர், அவரை வலுக்கட்டாயமாக மோட்டார் சைக்கிளில் ஏற்றி, தனியார் மாணவ விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு வைத்து அம்மாணவனையும் வேறு சில புதுமுக மாணவர்களையும் கடுமையான சித்திரவதைகளுக்குள்ளாக்கிய சிரேஷ்ட மாணவர்கள், தலைக்கவசத்தாலும் தாக்கியுள்ளனர்.

தாக்குதல் காரணமாக மயக்கமடைந்த மாணவனுக்குக் கட்டாயப்படுத்தி பனடோல் பருக்கிய பின்னர், தனியார் விடுதியிலிருந்து துரத்தி விட்ட பின்னர், சுகிள் வரைபட உதவியுடன் பல்கலைக்கழக விடுதிக்குச் சென்று அங்கிருந்து அம்புலன்ஸ் மூலமாக வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுள்ளார்.

தாக்குதல் மற்றும் சித்திரவதைக்குள்ளான நாத்தாண்டிய பகுதியைச் சேர்ந்த மாணவன் ஒரு காது கேட்கும் திறனை இழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக நீதியானதும், சுதந்திரமானதுமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், உடனடியாகவும், உள ரீதியாகவும் பாதிக்கப்பட்ட தனது மகனுக்குப் பாதுகாப்பளிக்குமாறு கோரியுள்ள தந்தை, பொலிஸ் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரியுள்ளார்.

## முல்லை.கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் காணாமல்போயுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

உடையார்கட்டு பகுதியில் தையல் பயிற்சி பெறும் யுவதிகளும், தையல் பயிற்சியாளர்களுமாக 15 பெண்கள் வாகனத்தில் நாயாற்று கடற்பகுதிக்குச் சென்றுள்ளனர்.

மேற்படி பெண்கள் நாயாற்றுக் கடலில் நீராடிக்கொண்டிருந்த போது அவர்களில் மூவர் திடீரென நீரில் அள்ளுண்டு சென்றுள்ளனர்.

நீரில் அள்ளுண்டு செல்லப்பட்ட மூவரில் இரு பெண்கள் மீட்கப்பட்டு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு பெண் காணாமல்போயுள்ளார்.

காணாமல்போன பெண்ணைத் தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். 47, 21 வயதுடைய பெண்களே இவ்வாறு மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

20 வயதுடைய பெண்ணே காணாமல்போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஒரே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இன்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

ஓட்டோ ஒன்று வீதியில் குடைசாய்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் ஓட்டோ பயணித்த இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பேராதனை பிரதேசத்தில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பயணித்த ஓட்டோவே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாடியில் இருந்து விழுந்து இளைஞர் ஒருவர் பலி!

காலி முகத்திடலுக்கு அருகில் உள்ள சொகுசு ரக ஹோட்டல் ஒன்றின் 31வது மாடியில் இருந்து விழுந்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இறந்தவரின் அடையாளம் பொலிஸாரால் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

உயிரிழந்தவர் அந்த ஹோட்டலில் ஒரு அறையில் தங்கியிருந்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

குறித்த நபர் உயிரிழப்பதற்கு முன்னர் எழுதிய ஒரு கடிதமும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில், "மன்னிக்கவும், அம்மா, நான் மிகவும் சோர்ந்து விட்டேன். நான் எப்போதும் மனதால் வருந்திக் கொண்டிருக்கிறேன்" என்று எழுதப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்று நள்ளிரவில் முதல் எரிபொருள் விலையில் மாற்றம்!

இன்று நள்ளிரவில் முதல் மாதாந்திர எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீப காலமாக உலக சந்தையில் கச்சா எண்ணெயின் விலை குறைவடைந்து வரும் நிலையில், நாட்டில் எரிபொருள் விலை குறையக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் கடந்த மாதம் அரசாங்கம் எரிபொருள் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இன்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்படவுள்ள பால் சார்ந்த உணவுகளின் விலைகள்!

நாட்டில் இன்று நள்ளிரவு முதல் பால் சார்ந்த உணவுப்பொருட்களின் விலை அதிகரிக்கப்படும் என அகில இலங்கை சிற்றுண்டிசாலைகள் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷனா ருக்ஷன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில்,

பால் மாவின் விலை உயர்வைக் கருத்தில் கொண்டு, பால் தேநீர் தவிர, பாலைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் அனைத்து வகையான பழச்சாறுகளின் ஒரு கோப்பையின் விலை இன்று நள்ளிரவு முதல் 10 ரூபாவால் அதிகரிக்கப்படும்.

இது தவிர, பாலைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் சீஸ், உள்ளிட்ட பல வகையான உணவுப்பொருட்களின் விலையும் 10 ரூபாவால் உயர்த்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகினார்.

இதன்போது, டிரான் அலஸிடம் 6 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

வாக்குமூலம் வழங்கிய பின்னர் டிரான் அலஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறினார்.

## ஓய்வுபெற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறைப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது, சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மலையடிக்கிராமம் 4 பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய ஓய்வுபெற்ற சிவில் பாதுகாப்பு படை உத்தியோகத்தர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காகச் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கோர விபத்தில் தம்பதி மரணம்

குருணாகல், மார்ச் 31

குருணாகல், குளியாப்பிட்டி – ஹெட்டிபொல வீதியில் கடவலகெதர பகுதியில் இடம்பெற்ற விபத்தில் கணவன் மற்றும் மனைவி உயிரிழந்துள்ளனர்.

வாகனம் ஒன்று குளியாப்பிட்டியிலிருந்து ஹெட்டிபொல நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவனும் மனைவியும் படுகாயமடைந்த நிலையில் குளியாப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இருவரும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

64 வயதுடைய கணவனும் 57 வயதுடைய மனைவியுமே உயிரிழந்துள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய வாகனம் பிரதேசத்தைவிட்டு தப்பிச்சென்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குளியாப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயம்

கொழும்பு, மார்ச் 31

அம்பலாந்தோட்டை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அம்பலாந்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்கல பகுதியில் இன்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் வருகை தந்திருந்த இருவர் அங்கிருந்த நபர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கான நபர் படுகாயமடைந்த நிலையில் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

30 வயதுடைய அம்பாந்தோட்டை கொக்கல பகுதியைச் சேர்ந்த நபரே காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நபர் மற்றும் பிறிதொரு தரப்பினருக்கிடையில் நீண்ட காலம் நிலவி வந்த முன்விரோதம் காரணமாக மேற்படி துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியைச் சந்தேகநபர்கள் குற்றச் செயலுக்காகப் பயன்படுத்தியுள்ளனர்.

மேலும் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை அம்பலாந்தோட்டை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## புலம்பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த ஆண்டு உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

ஆனால், இந்த அரசு அந்தச் செயற்பாடுகளை இடைநிறுத்தியுள்ளது. இது தொடர்பில் நான் நாடாளுமன்றத்திலும் கேள்வி எழுப்பியிருக்கின்றேன்.

இங்கு உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழுவை மூடிவிட்டு, ஜெனிவாவுக்குச்சென்று அமைச்சர் விஜித ஹேரத் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடுகின்றார். தடை விதிக்கப்பட்டுள்ளவர்கள் மீது ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் காணப்பட்டால் பிரித்தானியா அவற்றை இலங்கைக்கு அறிவிக்கலாம். அதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

பட்டலந்த மாத்திரமின்றி நாட்டில் 46 வதை முகாம்கள் காணப்பட்டன. எனவே, இவற்றைத் தவிர்த்து பட்டலந்த குறித்து மாத்திரம் பேச முடியாது. ரணில் விக்கிரமசிங்கவை முடக்குவதற்காகவே பட்டலந்த தொடர்பில் மாத்திரம் பேசப்படுகின்றது." – என்றார்.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.03.2025இல் வெளியிடப்பெற்றது.